ஆழத்து முத்துக்கள் 56

# கூத்துக் கலைஞர் எஸ்.பி. அலோசியஸ்

**- சேகர் தம்பிராஜா -**

கூத்துக்கள் பெருமளவில் பார்க்கும் வாய்ப்புக்கள் எங்களுக்கு எங்கள் காலங்களில் இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக கூத்துக்கள் நடைபெற்ற காலமது. யுத்த சூழலால் கலைநிகழ்வுகள் மிக அருமையாகவே இடம் பெற்று வந்த காலம். தொண்ணூறுகளின் நடுப் பகுதியில் வவுனியாவில் அவரை கலைஞர் என்று தெரிந்து கொள்ளாமல் அறிமுகமானோம். காலம் செல்ல செல்ல அவர் ஒரு நாடக, நாட்டுக் கூத்து கலைஞர் என்பது தெரிய வந்தது. அதன் பின்னர் அவருடனான தொடர்பு மிகவும் நெருக்கமாயிற்று.

நாங்கள் வவுனியா வளாகத்திலும், வவுனியா நரகசபை மண்டபத்திலும் இன்னும் பிற இடங்களிலும் மேடையேற்றும் நாடகங்களைப் தவறாமல் பார்த்து விட்டு எம் முதுகைத் தட்டி உற்சாகப்படுத்தியதுடன் மட்டும் நின்று விடாது பல ஆக்க பூர்வமான கருத்துக்களையும் கூறி வந்த ஒரு மரியாதைக்குரிய கலைஞன் அவர்.

மன்னம்பிட்டி சொருவில் தமிழ் பாடசாலையிலும் மன்னம்பிட்டி வித்தியாலயத்திலும் ஆசிரியராகவும் வ/கல்நாட்டின குளம் அ.த.க. பாடசாலை, பூந்தோட்டம் அ.த.க. பாடசாலை, வவுனியா இந்துக் கல்லூரி ஆகியவற்றில் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற நாடக, நாட்டுக் கூத்துக் கலைஞர் எஸ்.பி. அலோசியஸ் பற்றிய கலைப்பணி இம்மாத ஆழத்து முத்துகள் பகுதியை அலங்கரிக்கின்றது.

நாரந்தனையில் பிறந்து (1930.04.06), நாரந்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பக் கல்வியினை பயின்ற இவர் இடைநிலை, உயர்தரக் கல்வியினை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார். அவ்வாறு கல்வி கற்கும் காலங்களில் ஈழத்தின் சிறந்த நாட்டுக் கூத்து கலைஞரான 'பூந்தான் ஜோசப்' அவர்களின் கூத்துக்களை பார்க்கும் வாய்ப்பு பெற்று அதனுள் மிகுந்த ஈடு பாடும் கொண்டிருந்தார்.

அறுபதுகளில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்கும் பொழுது பல நாடகங்களில் நடித்த இவர் அங்கிருந்து படிப்பை முடித்து கொண்டு நாட்டுக் கூத்து கலைஞன் திரு பூந்தான் ஜோசப் அவர்களிடம் முறையாக கூத்து கலையினை பயின்றவர். கூத்துக் கலையை பயின்ற இவர் பயின்றதோடு மட்டும் நின்று விடாது தான் கல்வி கற்பித்த பாடசாலைகளில் மாணவர்களுக்கு பயிற்றுவித்து போட்டிகளுக்கு தயார் படுத்தி பரிசில்களையும் பெறச் செய்துள்ளார்.

நாடகம் மூலமாக உருவாகிய இறுக்கமான நட்பின் நிமித்தம் எங்களிடம் "உங்களைக் கொண்டு நான் ஒரு கூத்து செய்ய வேண்டும் என" அடிக்கடி கூறிக்கொள்வார். அவர் கூறியதன் படியே 1996ஆம் ஆண்டு முதன் முதலாக எங்களில் ஆறு பேருக்கு கூத்துக்காக சலங்கை கட்டி எங்களைப் பெருமைப்



படுத்தினார். இது மட்டுமல்ல வவுனியாவில் மேலும் பல கலைஞர்கள் உருவாகுவதற்கு இவர் காரணமாக இருந்துள்ளார். அத்தோடு இவரது இரு இளைய சகோதரர்களும் (மதுர நாயகம் மற்றும் ஜெயநாயகம்) இவருடன் இணைந்து கூத்தில் ஆடி வந்துள்ளனர்.

நாடகக் கலையை அழியவிடாது பேணிக் காக்க வேண்டும் என்பதற்காக எழுபதுகளின் ஆரம்பத்தில் 'வவுனியா ஐக்கிய நாடக மன்றம்' எனும் அமைப்பை உருவாக்கி அதனூடு பல நாடகங்களை மேடையேற்றியவர். சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழாவினை இணைச் செயலாளராக இருந்து நடாத்திய துடன் அந்த விழாவில் 'நீதியா நியதியா' எனும் நாடகத்தில் நடித்து பெரும் பாராட்டுகளையும் பெற்றவர் இவர்.

தொடர்ந்து 'சிறுதுளி' எனும் நாடகத்திலும் 'கைதி' எனும் நாடகத்தில் பெண் வேடத்திலும் நடித்தார். ஈழத்தின் புகழ் பெற்ற நாவலாசிரியரும் நாடகப் பிரதி எழுத்தாளருமாகிய முல்லைமணி வே.சுப்ரமணியம் அவர்களின் 'பண்டாரவன்னியன்' நாடகத்தை நெறியாள்கை செய்து அதில் காக்கை வன்னியன் பாத்திரம் ஏற்று நடித்த பெருமையும் இவருக்குண்டு. 'அன்பை அழிக்காதே', 'ஆயுட்தண்டனை' போன்ற சமூக நாடகங்களையும் 'சிங்கப்பூர் மாமா' எனும் நகைச்சுவை நாடகத்தையும் 'சிலம்பின் செல்வி' எனும் வரலாற்று நாடகத்தையும் 'அகந்தையின் அழிவு' எனும் நாட்டுக் கூத்தினையும் பல இடங்களில் மேடையேற்றி உள்ளார்.

நாடகங்களுடன் மட்டுமன்றி தென்மோடி வடிவில் அமைந்த நாட்டுக் கூத்துகள் பல வற்றை தயாரித்து மேடையேற்றி 'நாட்டுக் கூத்து கலைஞர்' என்ற பட்டத்தையும் பொற்கிளியையும் பொற்றுக் கொண்டவர். இவருடைய தோற்றமும் குரல் வளமும் இவரது கூத்து முயற்சிக்கு பெரிதும் பக்க பலமாக இருந்தது. தன்னோடு மட்டுமன்றி தனது மகள்மார் இருவரையும் இந்தக் கலையில் ஈடுபட வைத்தவர்.

கூத்துக் கலைக்கு இவர் செய்த சேவையினைக் கௌரவிக்கும் முகமாக 'வவுனியா விபுலானந்தர் மன்றம்' விபுலாநந்தர் நூற்றாண்டு விழாவில் (1991) 'நாட்டுக் கூத்து கலை இலக்கிய சான்று' எனும் சான்றிதழினையும் வழங்கிக் கௌரவித்தது.

ஞானசவுந்தரி (1973, 74), அகந்தையின் அழிவு (1974), விஜய மனோகரன்(1975,76), தாவீதும் கோலியாத்தும்(1981, 96), ஏரோதியாள் சபதம் (1988, 95), காத்தவராயன் (1992, 93,94), மூவிராசாக்கள்(1997), போன்ற கூத்துக்களை பல மேடைகளில் மேடையேற்றி உள்ளார். இவரது கூத்துக்கள் வவுனியா புனித அந்தோனியார் ஆலய வெளியரங்கு, செட்டிகுளம் கத்தோலிக்க ஆலய அரங்கு, வவுனியா நகரசபை திறந்த வெளியரங்கு, ஓமந்தை கத்தோலிக்க ஆலயம், வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக அரங்கு என்பனவற்றுடன் வவுனியா மாவட்டப் பாடசாலைகள் பலவற்றிலும் மேடை ஏற்றியுள்ளார்.

வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்தம் ஆடப்பட்டு வரும் 'பலிக்களம்' நாடகத்துக்கு அன்னாரது பங்களிப்பு இரவு பகல் பாராமல் பெரியளவில் இருந்ததனை அங்கு வாழ்ந்த சிறு காலப் பகுதியில் அறிந்தவன் நான்.

வவுனியாவில் திருமறைக் கலாமன்றத்தின் கிளையை உருவாக்குவதற்கு, முன் நின்று உழைத்து அதன் தலைவராக இறக்கும் வரையில் பணியாற்றியவர். திருமறைக் கலா மன்றத்தை பெயரளவில் உருவாக்கியது மட்டுமன்றி வவுனியா மாவட்டம் முழுவதும் அதனை அறிமுகம் செய்து வைக்கும் முயற்சியில் இறங்கி வெற்றியும் கண்டார். வவுனியா வளாக மாணவன் அருளப்பு நிமால் கொன்ஸ்ரன்ரைன் அவர்களது 'வாழ்வின் மறுபக்கம்' எனும் சமகால விடயங்களைக் கொண்டமைந்த சமூக நாடகம் ஒன்றினை வவுனியா மாவட்ட பாடசாலைகள் பலவற்றில் மேடையேற்றி (பூவரசங்குளம் முதல் சிதம்பரபுரம் வரை) எல்லா இடங்களிலும் திருமறைக் கலாமன்றத்தை அறிமுகம் செய்து வைத்தவர். அதன் அங்குரார்ப்பண நிகழ்வில் திருமறைக் கலா மன்றத்தின் பிரதம இயக்குநர் வணக்கத்துக்குரிய அருட் தந்தை. மரியசேவியர் அவர்களை அழைத்து அவர் தலைமையில் கலைக் கதம்பம் ஒன்றினை நடத்தி அந்த இரவுப் பொழுதினை கலைப் பொழுதாக மாற்றியவர்.

இவற்றுடன் இவரது கலைப்பணி நின்றுவிடவில்லை. அங்கு பல இளங் கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்ற பேரவாவில் வவுனியா மாவட்ட பாடசாலைகளில் உயர் தர வகுப்பில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்கள், முறையான நாடகப் பயிற்சி வேண்டி நின்ற எங்களைப் போன்ற நாடக விரும்பிகள் போன்றவர்களை இணைத்து ஐந்து நாட்கள் முழுநேர நாடக பயிற்சிப் பட்டறை ஒன்றினை நடத்தி அதற்கான சான்றிதழினையும் வழங்கியவர்.

அந்த பயிற்சிப் பட்டறைக்கு ஈழத்தில் புதிய நாடகப் போக்குக்கு அத்திவாரம் இட்ட நாடக அரங்கக் கல்லூரியில் இருந்து மூத்த நாடக கலைஞர்களான கலைஞர் ஜெனம் பிரான்சிஸ், கலைஞர் எஸ்.ரி. அரசு (அரசையா) மற்றும் அரங்க செயற்பாட்டு குழுவில் இருந்த கலைஞர் விந்தன், கலைஞர் மு.ராதாகிருஷ்ணன், கலைஞர் பாஸ்கரன், கலைஞர் கு.மகிழ்ச்சிகரன் மற்றும் அறிவிப்புப் பயிற்சிக்காக கலைஞர் க.வை.தனேஸ்வரன் (அமரராகி விட்டார்) போன்றோரை அழைத்து வந்து பயிற்சி செய்து வைத்த பெருமை எஸ்.பி.அலோசியஸ் அவர்களையே சேரும். அவரது அந்த தன்னலம் பாரா சேவையில் நானும் பயனாளியாக இருந்ததற்கு அவருக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டவனாகின்றேன்.

இவ்வாறு பல காலமாக கலைப் பசியுடனேயே வாழ்ந்த இந்த ஆத்மா ஜூன் மாதம் 26ஆம் நாள் 1998ஆம் ஆண்டு இக்கலையுலகை விட்டு நீங்கிவிட்டது.



sekar.thambyrajah@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'

www.thaiveedu.com